# “அறிவியல் சமயத்தை பொய்யாக்குகிறதா? அன்றி மெய்யாக்குகிறதா? ”



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர்
அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

ஆடி மாதம் (August 2016)
மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117

காணிக்கை: ரூ.10 /-

# உள்ளுறை

1. அறிவியல் சமயத்தை பொய்யாக்குகிறதா? அன்றி மெய்யாக்குகிறதா? (சமயமும் அறிவியலும்).

2. மணி மந்திரம் மருந்து. (சித்த மருத்துவம், சித்தர் மருத்துவம் பற்றிய தவறான கருத்துக்களுக்கு குருதேவர் தரும் விளக்கம்).

3. குருவே உன் திருவடி சரணம்! (சித்தரடியான் ஒருவர் மனம் உருகிப் பாடிய பாடல்).

# அறிவியல் சமயத்தை பொய்யாக்குகிறதா? அன்றி மெய்யாக்குகிறதா?

# (சமயமும் அறிவியலும்)

**தொகுப்பு:- அருள்மிகு அருட்போர் வியூக நாயகம், வேம்பை சீ.மணி.**

மின் சத்தி (Electric Power), காந்த சத்தி (Magnetic Power), அணு சத்தி (Atomic Power) ... என்று பல சத்திகள் மேலைநாட்டு விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப் பட்டுத் தொழிற் புரட்சியும், பொருளாதார வளர்ச்சியும், சமுதாய மறுமலர்ச்சியும் உருவாக்கப்பட்டு விட்டது. ஆனால், கீழைய நாட்டு விஞ்ஞானிகள் வரலாற்றுக்கும் முந்திய மிகப் பழங்காலத்திலேயே கண்டுபிடித்திட்ட தெய்வீகச் சத்தி (Divine Power), எண்ணச் சத்தி (Thought Power), பார்வை சத்தி (Eye Power), மனோ சத்தி (Will Power) ... முதலியவைகள் ஏதேனும் தொழிற் புரட்சியை, பொருளாதார வளர்ச்சியை, சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கினவா? என்ற வினவுக்குத் தெளிவான சான்று நிறை விடை பகர ஆவன செய்து வருகிறார், நமது குருதேவர், அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்.

ஒவ்வொரு தனி மனிதரின் உள்ளத்தையும் திறக்கும் திறவு கோல்களான அடிப்படைக் கருத்துக்கள், செய்திகள், கொள்கைகள்,

எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள், செயல்திட்டங்கள் ..... முதலியவை பற்றியே கூற விரும்புகிறார் நமது குருபீடம், ஞானாச்சாரியார் அவர்கள். இக்கருத்து உங்களனைவரையும் அவருடனேயே ஒரு கனவுலக ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ளச் செய்திடும். அக்கனவு கலைந்து நீங்களனைவரும் நனவுலகுக்கு வந்த பிறகுதான் ஞானாச்சாரியார் யார்? அவரது சிந்தனைகள், கொள்கைகள், குறிக்கோள்கள், போக்குகள், நோக்குகள், கட்டுப்பாடுகள், திட்டங்கள், செயல்முறைகள் யாவை? என்ற வினாக்கள் நிலையான வடிவைப் பெறும். அப்போது நிழல் நிசமாகிறது என்ற பேருண்மை புரியும்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இறப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் எந்த ஒரு மனிதனும் இறப்பின் கடைசி அரவணைப்பு வரை அதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு மனிதனும் ‘தனக்கு இறப்பு வராது; அப்படியே வர நேரிட்டாலும் தான் விரும்புவதையெல்லாம் செய்து முடித்த பிறகே வந்திடும்.....’ என்பது போலவே எண்ணுகிறான். இந்தத் தவறான எண்ணம் ஏறத்தாழ எல்லோரிடமும் வலுப்பட்டு இருப்பதால்தான் ‘பொய்’, ‘ஏமாற்று’, ‘பொறாமை’, ‘போட்டி’, ‘சதி’, ‘சூழ்ச்சி’, ‘அகம்பாவம்’, ‘ஆணவம்’, ‘கொலை’, ‘கொள்ளை’ முதலியவை குறையாத மனித சமுதாயமே தொடர்ந்து இருந்து வருகிறது.

எத்தனையோ சித்தர்கள், சித்தியார்கள், அருளாளர்கள், ஆழ்வார்கள் தோன்றிக் கொண்டே இருந்தும் கூட, இம்மனித சமுதாயத்தில் இம்மியளவு கூடக் குறைகளும், கறைகளும் நிலையாகக் குறையவில்லை. ஒவ்வொரு காலக் கட்டங்களில் தற்காலிகமாக மனித சமுதாயத்தில் வாய்மை, தூய்மை, நன்மை, அன்பு, அறம், அமைதி, மகிழ்ச்சி, நிம்மதி, நிறைவு, சமத்துவம், சகோதரத்துவம், மனிதப் பாசம்,

மனிதப் பற்று, மனித ஒற்றுமை பசுமையாகத் துளிர்த்துப் பின் பழுத்து உதிர்ந்ததாகத்தான் வரலாறு கூறுகிறது.

**தனி மனிதர்களைத் திருத்தி நெறிப்படுத்தவும், சமுதாயப் போக்கில் வெறிகள் தலைவிரித்தாடாமல் கட்டுப்படுத்தவும், சமுதாயத்தின் போக்கைச் சுவையும், சுறுசுறுப்பும் உள்ளதாக ஆக்கிடவும் உருவாக்கப்பட்ட தத்துவமே சமயம், மதம் (Religion)** என்று கூறப்படுவது.

இந்த இரண்டுக்கும் இன்றியமையாத் தேவைகளை வழங்குவதுதான் அறிவியல், விஞ்ஞானம், புற ஞானம் என்று குறிக்கப்படுகின்றது. இது மனிதனின் மடமை, மூடநம்பிக்கை, கண்மூடிப் பழக்க வழக்கம், தேவையில்லாத அச்சம், பயனில்லாத கொள்கை, அடைய முடியாத குறிக்கோள்... முதலியவைகளையெல்லாம் குறைத்தும், அகற்றியும் வருகின்றது. அத்துடன் இது, மனித வாழ்வுக்குத் தேவையான பல சாதனைகளையும், வசதிகளையும், மருந்துகளையும், உணவு வகைகளையும் படைத்துக் கொடுக்கின்றது.

எனவே, மனிதன் புற வாழ்வில் காணுகின்ற சுகங்களும், சுவைகளும் அகவாழ்வை மறக்கச் செய்து விட்டன. அதனால் அக வாழ்வுக்குச் சுகம் தரும் சமயம் தனது முதன்மையையும், செல்வாக்கையும் இழக்க நேரிட்டு விட்டது. இன்னும் சொல்லப் போனால் விஞ்ஞானத்திடம் அளப்பரிய நம்பிக்கையும், விருப்பமும் ஏற்பட்டு விட்ட காரணத்தால், இன்றைய நாகரீகத்தின் பெயரால் மனிதன் *'மதம் ஒரு மது', 'சமயம் ஒரு சாக்காடு', 'சமயத் தத்துவம் சாக்காட்டுக்குப் பாதை', 'மதம் மனிதனை விலங்கு நிலைக்குக் கொண்டு போகவே பயன்படும்', 'மதம் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை', 'சமய வாதம் ஒரு வகை வெறியுணர்வையே வளர்க்கும்', 'மதம் பகுத்தறிவுக்குப் பகையானது', 'சமயம் மடமை நிறைந்தது',* ... என்றெல்லாம் கருத்துக் கூறும் துணிவு ஏற்பட்டு

விட்டது. இதனால் தனி நபர் வாழ்வு (Individual Life), குடும்ப வாழ்வு (Family Life), சமுதாய வாழ்வு (Social Life)... முதலியவை பெருமளவு பாதிக்கப் பட்டு விட்டன.

இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான நிலையில்தான் மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும், மதமும் அறிவியலும், அக ஞானமும் புற ஞானமும், சமயத்துவமும் பகுத்தறிவு வாதமும் ... என்ற தலைப்பில் இரண்டையும் ஒப்புநோக்கி ஆய்வு நிகழ்த்த வேண்டிய இன்றியமையாத தேவை, அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த அவசியம் அரசியல் வாதிகள், சமுதாய வாதிகள், அறிவியல் மேதைகள், சமய வாதிகள், பகுத்தறிவு வாதிகள், சீர்திருத்த வாதிகள், கலைஞர்கள், புதுமை விரும்பிகள் ... முதலியவர்களால் நன்கு உணரப்பட்டு, தேவைக்கேற்ப பொறுமையோடும், முறையோடும் தொடர்ந்து பல காலம் நிகழ்த்தப் பட்டிடல் வேண்டும். அப்படி பல கால ஆய்வுகள் நிகழ்த்திக் கண்டுபிடிக்கப்படும் முடிவுகள் செயலாக்கப்படல் வேண்டும்.

கண்ணை மூடிக் கொண்டு அனைத்தையும் நம்புகிறவர்களைக் கருத்துக் குருடர்கள், மூடர்கள், பழமை வாதிகள், மடமையில் உழல்பவர்கள்.... என்றெல்லாம் பழிமொழியும், இழிமொழியும் கூறுவது போல்; கண்ணை மூடிக் கொண்டு அனைத்தையும் இழிக்க, பழிக்க, ஒழிக்க முற்படுபவர்களையும் கருத்துக் குருடர்கள், மூடர்கள், பழமை வாதிகள், பகுத்தறிவு வெறியில் உழல்பவர்கள் .... என்றெல்லாம் பழிமொழியும், இழிமொழியும் கூற வேண்டியிருக்கும்.

எனவே, எதையும் முழுமையாகத் தெரிந்து கொண்டு அவற்றை ஆராய்ந்து அறிந்து கொண்டு, அதற்கு மேல் அறிந்தவைகளைப் பிறர் புரிய எடுத்துக் கூறிப் பிறரையும் தம்மோடு சேர்த்துக் கொண்டு மனித வாழ்வு நலமும், வளமும், வலிவும், பொலிவும் பெற்றுத் திகழ இவையெல்லாம் தேவைதானா? தேவையென்றால் எந்த அளவு? தேவையில்லையென்றால் எவையெவை?...

என்பதையெல்லாம் **நடுநிலையிலிருந்து முடிவு கட்டுபவர்களே உடனடியாக இவ்வுலகுக்குத் தேவைப்படுகிறார்கள்**.

**அப்படிப்பட்ட நடுநிலை ஆய்வாளர்களின் எண்ணிக்கை பெருகிடல் வேண்டும்.** அவர்களே வருங்காலச் சந்ததியாரின் வாழ்வுக்குச் சுவைமிகு உணவும், குளிர் நிழலும், மருந்தும் வழங்க வல்ல பயிர்களை வளர்க்கும் நாற்றங்கால் பயிர் போன்றவர்கள். இந்நாற்றங்கால் பயிர்களுக்கே நோய் கண்டு விடுமென்றால் வருங்காலம் வறட்சியும், வறுமையும் நிறைந்த ஒன்றாகவே இருந்திடும். எனவே, <u>நடுநிலை நெஞ்சமும், ஆராய்ச்சி சிந்தையும், பொறுமை உணர்வும், பரந்த அறிவும், உண்மை காணும் நோக்கும், தொண்டுமிகு போக்கும் உடையவர்களை உருவாக்கும் மாபெரும் பணியே இன்றைக்கு ஆற்றிட வேண்டியதாக உள்ளது</u>.

இப்பணிக்குரியவர்களைத் தேடவும், தேடிக் கிடைக்கப் பெற்றவர்களை உருவாக்கவுமே தன் வாழ்வின் பெரும்பொழுதினைச் செலவிட்டு வருகிறார் நமது குருபீடம், ஞானாச்சாரியார். இத்திருநாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலும் வாய்ச்சொல் வீரர்களே மிகுதி. அதிலும் வெட்டிப் பேச்சு, திண்ணைப் பேச்சு, வீண் பேச்சு, வம்புப் பேச்சு ... என்று பலவகைப் பேச்சுக்களில் பொழுதைப் போக்குபவர்களே அதிகமாக உள்ளனர்.

இதை படிக்கும் கூட்டம் உயர்ந்த மலைச் சிகரங்கள் நிறைந்த இடம்போல் உயர்ந்த கல்வியுணர்வு உடையவர்களைப் பெற்றிருக்கின்றது. மலை முகடுகளிடையே எழுப்பப்படும் ஒலி, தொடர்ந்து பல கல் தொலைவுக்கு எதிரொலித்துக் கொண்டே செல்லும். அதுபோல் நமது குருபீடம் ஞானாச்சாரியார் கூறும் கருத்துக்கள் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பலரிடம் எதிரொலித்துக் கொண்டே செல்லும் என்று எண்ணுகின்றேன். அந்த எண்ணத்தால்தான், இன்றும் என்றும் உலகில் சிந்தனைக்குரியதாக உள்ள **'சமயமும் அறிவியலும்'** என்ற

தலைப்பில் எழுத விரும்பினேன். இந்த சிந்தனைகள் உங்களைச் சிந்தனையாளர்களாக்கிடும்.

சமயம், **'பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தனது ஊழ்வினைக்கும் விதிக்கும் ஏற்பவே வாழ்ந்து மாண்டிடுகின்றான்'** என்று கூறுகின்றது.

சமயத்தை மறுக்கவோ, எதிர்க்கவோ விரும்புகின்றவர்கள் அறிவியலின் துணையையே நாடுகின்றார்கள். அதாவது அறிவியல் என்பது சமயத் தத்துவங்கள் பொய்மையானவை என்று மெய்ப்பிக்கத் தோன்றிட்ட ஒன்று என்று பலர் நம்புகிறார்கள். இப்படிப் பலரின் நம்பிக்கைக்கும், விருப்பத்துக்கும் உரியதாகி விட்ட அறிவியலின் உண்மை நிலை என்ன? என்பதை விளக்குவதே எங்கள் போன்றோரின் தலையான கடமை.

இந்த அறிவியல் சமயம் கூறுவது போல் மனிதன் மாண்டு போகத் தேவையில்லை. மனிதன் மாண்டு போகாமலிருக்க மருந்தொன்று உள்ளது என்றோ! விஞ்ஞான வாழ்வியல் முறை ஒன்று உள்ளது என்றோ!! இன்று வரை கூறிட முன் வரவில்லை. ஏனெனில், இறப்பு (Mortality) என்பது இயற்கையின் நியதி, சட்டம், விதி, முறை, அடிப்படை, ஒழுங்கு,.... என்ற கருத்தினை ஒப்புக் கொண்டுதான் அறிவியல் பிறந்து வளர்ந்து வருகின்றது.

அறிவியலின் அடிப்படையில் வளர்ந்துள்ள மருத்துவத் துறை வல்லார்களில் யாருமே, "நான், இந்த நோயாளியின் உயிரைக் காப்பாற்றித் தருகிறேன், இந்த நோயாளியை இறப்பிலிருந்து தடுத்து நிறுத்தி விடுவேன், இந்த நபருக்கு இனிமேல் இறப்பே இருக்காது...." என்று கூறிட முன் வருவதில்லை. ஏனெனில், இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள மருந்துகளில் எந்த மருந்தும் மரணத்தைத் தடுக்கும் ஆற்றலுடையதில்லை.

இன்னும் சொல்லப் போனுல் எந்த மருந்தாலும் குறிப்பிட்ட நோயைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் நலப்படுத்திடும் என்று உறுதி கூறிட முடியவில்லை. அதாவது, குறிப்பிட்ட நோயை நலப்படுத்துதற்கென்றே கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் கூட, அந்த நோய்க்குரியவரின் உடல் வளம், வலிமை, நோயின் முதிர்ச்சி, நோயாளியின் உணவு முறை, முன்னெச்சரிக்கைச் செயல்,.... முதலியவைகளுக்கேற்பத்தான் குறுகிய கால அளவிலோ, அன்றி நெடிய கால அளவிலோ நலமாகின்றது. எனவே, உடலுக்கு வந்துள்ள நோய்களுக்கு மட்டுமே மருத்துவத் துறையில் சில (Medicines and Treatment) மருந்துகளும், மருத்துவ முறைகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. எனவே, உடம்பைப் பொறுத்தவரை அக்கறை காட்டிப் பாதுகாப்புச் செய்வதுதான் அறிவியல்.

உயிரைப் பொறுத்தவரை அக்கறை காட்டிப் பாதுகாப்புச் செய்வதுதான் சமயம். அதாவது, 'சமயம்' என்பது உயிர்க்கு உரியது. இந்த விளக்கத்தின் அடிப்படையிலேதான் சமயத்தையும் அறிவியலையும் ஒப்பு நோக்கி ஆராய்ச்சி செய்ய முற்பட விழைகின்றேன் நான்.

'உயிர்' என்பது கண்ணுக்குத் தெரியாது. அதேபோல், சமயத்தின் உயிரான 'கடவுள்' கண்ணுக்குத் தெரியாதவர். 'உயிர்' எப்படி உண்டாகிறது என்பதை எவரும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதுபோல் 'கடவுள்' எப்படி உருவானுர் என்பதை எவரும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதேபோல் கடவுள் மனிதர்களுக்குத் தோற்றமளித்த பிறகு எங்கே போகிருர்? எப்படி வாழுகிருர்? என்ன செய்கிருர்? என்பனவற்றிற்கு யாராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. 'உயிர்' எந்த வயதில் உடம்பை விட்டுப் போகும்? அப்படிப் போவது ஏன்? என்பனவற்றிற்கு யாராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை.

இதைப் போலவே ‘கடவுள்’ எந்தப் பத்தனுக்கு, எப்போது தோன்றுவார்? அப்படிச் சிலருக்கு மட்டுமே தோற்றமளிப்பது ஏன்? என்பனவற்றிற்கு யாராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. இறப்புக்குப் பின் உயிர் எங்கே போகிறது? எப்படி வாழுகிறது? என்ன செய்கிறது? என்பனவற்றிற்கு யாராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. இதேபோல் கடவுள் மனிதர்களுக்குத் தோற்றமளித்த பிறகு எங்கே போகிறார்? எப்படி வாழுகிறார்? என்ன செய்கிறார்? என்பனவற்றிற்கு யாராலும் விடை கண்டு பிடிக்க முடியவில்லை.

உயிர் பிறப்புக்கு முன் எங்கே இருக்கிறது? என்ன வடிவில் இருக்கிறது? அது எப்படி உடலுக்குள் வருகிறது? வாழ்கிறது? ஏன் உடலை விட்டுப் போய் விடுகிறது? என்பனவற்றிற்கு யாராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. இதைப் போலவே கடவுள் மனிதர்களால் கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னால் எங்கே இருந்தார்? கடவுளுக்கு வடிவம் என்ன? மனிதன் கட்டும் கோயில்களுக்குள் கடவுள் குடிபுகுவது எப்படி? ஏன் அவர் கோயிலை விட்டுப் போய் விடுகின்றார்? உடல் நலிவது போல் கோயிலும் பாழடைவது ஏன்? உடலுக்கு மருந்து தேவைப்படுவது போல் கோயிலுக்குக் குடமுழுக்கு ஏன் தேவைப்படுகிறது? மனித வாழ்வில் பிறந்த நாள் விழா, காதணி விழா, பருவ விழா, திருமண விழா, நினைவு விழா, வெற்றி விழா, ... என்று பல விழாக்கள் இருப்பது போல் கோயிலிலும் பல விழாக்கள் வழக்கிலிருப்பது ஏன்? இவற்றால் பயனுண்டா? ... என்பனவற்றிற்கெல்லாம் யாராலும் விடை காணவே முடியவில்லை.

இப்படி <u>உயிரை அடிப்படையாகக் கொண்ட சமயத் துறை</u>யிலும், <u>உடலை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் துறை</u>யிலும் யாராலும் விடை கண்டுபிடிக்க முடியாத வினாக்கள் பல இருக்கின்றன. எனவே, சமயத்தில்தான் விடை காண முடியாத புதிர்கள் நிறைய

இருக்கின்றன; அறிவியலில் விடை காண முடியாத புதிர்களே இல்லை என்று சிலர் கூறித் திரிவது மாபெருந் தவறாகும்.

அதாவது, ஏன்? எப்படி? எவ்வாறு? எதற்காக? எவ்வளவு காலமாக? ... என்ற வினாக்களுக்கு நேரடியான பதிலைத் தரக் கூடிய ஒரு துறைதான் ‘அறிவியல்’ என்றும், ஏன்? எப்படி? எவ்வாறு? எதற்காக? எவ்வளவு காலமாக? .... என்ற வினாக்களுக்கு நேரடியான பதிலைத் தராத அல்லது தர முடியாத ஒரு துறைதான் ‘சமயம்’ என்றும்... பகுத்தறிவுவாதிகள், சீர்த்திருத்தவாதிகள், புரட்சிவாதிகள், புதுமை விரும்பிகள்... கூறி வரும் கருத்து மிகப் பெரிய தவறானது, பிழையானது, பொய்யானது, மோசடியானதும் கூட.

இப்படி நான் கூறுவது வெறும் வாதத் திறமையாலோ! சொல் விளையாட்டினாலோ! அல்ல. இக்கருத்தைப் படிப்படியாக விளக்கும் போது நீங்களே இக்கருத்துக்களைப் பரப்பும் உரமும், உறுதியும் பெற்றிடுவீர்கள்.

அறிவியலால் பல அற்புதச் சாதனைகள் விளைந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதை வைத்துக் கொண்டு சமயத்தால் அறியாமையும், அசட்டுத்தனமும், முன்னேற்றத் தடங்கலும் மட்டுமே ஏற்பட்டு வருகின்றன என்று கூறுவதை ஏற்க முடியாது. இதனை அறிவியலே ஒப்புக் கொள்கின்றது.

ஒருவன் நன்றாக பாடுகின்றான் அல்லது சித்திரம் வரைகின்றான் அல்லது சிலை செதுக்குகின்றான் ... என்றால், அதற்கு அவனுடைய ஊழ்வினையும், விதியும்தான் காரணம் என்று சமயம் கூறுகிறது. இப்படிக் கூறுவது அறியாமை, மடமை, முட்டாள்தனம், மூடநம்பிக்கை, பத்தாம் பசலித்தனம், ஏமாற்று, பொய், பயித்தியக் காரத்தனம் ... என்று சமய வெறுப்பாளர்களும், மறுப்பாளர்களும் குதிக்கிறார்கள்.

ஆனால், நிலவை எட்டிப் பிடித்து விட்ட அறிவியல் ஒரு சாதாரண மனிதனை ஏதேனும் ஒரு மருந்தினாலோ! அல்லது மருத்துவ முறையினாலோ! சிறந்த பாடகனாகவோ! ஓவியனாகவோ! சிற்பியாகவோ! ஆக்கிட முடியவில்லை. அந்த அளவு கூடத் தேவையில்லை. அறிவியலின் சாதனைகளால் மந்த அறிவு உடையவர்களைக் (Dull heads) கூர்மையான (Sharp Intelligence) அறிவுடையவர்களாக ஆக்கிட முடியவில்லை. திருடர்கள், கொலைகாரர்கள், சமூக விரோதிகள், வெறியர்கள், பயித்தியங்கள் .... முதலியோர்களைத் திருத்திட முடியவில்லை. இவற்றை அறிவியலின் தோல்வி என்பதா? அல்லது இயலாமை என்பதா? ஆனால் சமயம் இவற்றிற்கெல்லாம் காரண காரியங்களைக் கூறி நல்ல விளக்கமும் முடிவும் வழங்குகிறது.

**“கடவுள் கலை வல்லார்களையும் கள்வர்களையும் காமுகர்களையும் கருவிலேயே உருவாக்குகிறார்.”**

**“பரமன் படைப்பில் பத்தினியையும் பரத்தையையும் படைத்தான்.”**

**“ஆண்டவன் ஆதியிலேயே ஆத்திகனையும் நாத்திகனையும் உற்பத்தி செய்தான்.”**

**- குருபாரம்பரிய வாசகங்கள்.**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவரும், பிற்காலச் சோழப் பேரரசின் தந்தையும், தமிழின அரச குலகுருவும், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியுமான குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் எழுதிய ‘குருபாரம்பரியம்’, ‘குருவாசகம்’ என்ற நூல்களில் இவ்வாசகங்கள் உள்ளன. இவை போன்ற எண்ணற்ற வாசகங்கள் சமயத் தத்துவங்களைத் திறம்பட விளக்குகின்றன.

சமயத்தைப் பொறுத்தவரை எந்த ஒரு மனிதனின் அடிப்படை உணர்வையும், கொள்கைகளையும், குறிக்கோளையும், ஆசையையும் ... மாற்றவே முடியாது. அதாவது, ஒரு மனிதனிடம் பிறப்பின் ஆரம்பத்திலேயே, கருவின் வளர்ச்சியிலேயே இயற்கையாகத் தோன்றிடும் பண்புகளை எம் முயற்சியாலும் மாற்றிடவே முடியாது. எனவே, கற்கின்ற கல்வியும், செய்கின்ற பயிற்சியும், எடுக்கின்ற முயற்சியும், அமைகின்ற சூழ்நிலையும் ஒரு மனிதனின் பிறவிப் பண்புகளை மாற்றவே முடியாது என்பதுதான் சமயத்தின் முடிந்த முடிவு.

பகுத்தறிவுவாதிகள் இதனை மடமை என்று மறுக்க அறிவியலின் துணையை நாடுகிறார்கள். அறிவியலோ குறிப்பிட்ட கைரேகை, முகத் தோற்றம், நடை, அங்க அமைப்பு ... முதலியவைகளுக்கேற்பக் குறிப்பிட்ட பண்புநலன்கள் இருந்தே தீரும் என்று முடிவு கட்டுகிறது. குற்றவியல் (criminology) என்றோர் புதிய அறிவியல் துறையே இந்த அடிப்படைக் கருத்துக்களில்தான் வளர்ந்து வருகிறது. ஆனால், சமயம் ஊழ்வினையும், விதியும்தான் மனிதனுக்கு உடலமைப்பு, இரேகை, தோற்றம், நடை .... முதலியவற்றை உருவாக்குகிறது என்று வலியுறுத்திக் கூறுகிறது. எனவே, அறிவியல் சமயத்தின் கருத்தை ஆதரிப்பதாகவே அமைகின்றது.

சமயம், இரண்டு மனிதர்கள் எல்லா வகையிலும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள், **“ஒவ்வொரு முறை பூக்கும் ஒவ்வொரு மலர்க்கும் தனித்தனியான வண்ணமும், வடிவும், மணமும், எழிலும் இருக்கும் என்பது போல்; பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியான எண்ணமும், வடிவும், பண்பும், தோற்றமும் இருக்கும். இப்பேருண்மையே இறைவனின் எல்லையற்ற பேராற்றலை இயம்பும்”** (குருபாரம்பரியம்) என்று கூறி எல்லோராலும் ஒளிமயமான

இறைவனைப் பார்க்க முடியாது, குறிப்பிட்ட சிலரால் மட்டுமே இறைவனைப் பார்க்க முடியும் என்று கூறுகிறது.

அறிவியலிடம் ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றும், பெருவிருப்பும் உடைய பகுத்தறிவுவாதிகள் இக்கருத்தை முழு மூச்சாக எதிர்க்கிறார்கள், வெறுக்கிறார்கள். அதனால், அவர்கள் இக்கருத்தை மறுக்க, '*மனிதர்கள் அனைவரும் ஒன்றுதான், மனிதனுக்கு மனிதன் மாறுபாடும், வேறுபாடும் உண்டு என்று கருதுவதும், கூறுவதும் மூடநம்பிக்கை, மடமை, அறியாமை....*' என்று கூச்சலிடுகின்றார்கள். இக் கூச்சலுக்கு அவர்களின் நம்பிக்கைக்கும், விருப்பத்துக்கும் உரிய அறிவியலே பதில் தருகின்றது.

"மனித உடம்பில் ஓடும் குருதியில் பல வகையுண்டு. A, B, O, AB என்று நான்கு வகைப்பட்ட மாபெரும் பிரிவுகள் உண்டு. இவை ஒன்றுக்கொன்று மாறினால் உடனேயே இறப்பு நேரிடும்" என்று அறிவியல் மிகத் தெளிவாக விளக்குகின்றது.

"எல்லா மனிதனின் கண்ணின் பார்வையின் ஆற்றலும் ஒரே மாதிரியாக இல்லை. கண் பார்வையில் 'தொலைவுப் பார்வை', 'அண்மைப் பார்வை', 'வெள்ளெழுத்து', 'மாலைக் கண்',... என்று குறிப்பிட்ட சில பிரிவுகள் உள்ளன. இவற்றில் ஒவ்வொரு பிரிவுக்கும் மிக நுட்பமான +1.0, +2.0, ..., -1.0, -2.0 ... என்பது போல் பலவகை வேறுபாடுகள் இருக்கின்றன. எனவே, எவ்விதப் பாதிப்புமில்லாதவர் தேவையின்றிக் கண்ணாடி அணிந்தால் பாதிப்பு வந்திடும் ...." என்று அறிவியல் மிகத் தெளிவாக விளக்குகின்றது.

"**மனிதர்களின் உணவு செறிக்கும் ஆற்றல்** (digesting power), **செய்திகளை அறிந்து கொள்ளும் ஆற்றல்** (grasping power), **கருத்துக்களை புரிந்து கொள்ளும் ஆற்றல்** (understanding capacity), **ஒலிகளைக் கேட்கும் செவியாற்றல்** (hearing ability) **... முதலியவை மனிதருக்கு மனிதர் பலவகையான வேறுபாடுகளையும்,**

**மாறுபாடுகளையும், அளவுகளையும் பெற்றிருக்கின்றன. இவை எல்லா மனிதருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.”** (குருபாரம்பரியம், குருவாசகம், ... என்னும் நூல்களில் இவை போன்ற வாசகங்கள் இருக்கின்றன).

இவற்றையெல்லாம் ஒப்புநோக்கும் போதுதான் ‘சமயம் என்பதை மெய்யாக்கத் தோன்றியதுதான் அறிவியல்’ என்கின்ற ஒன்றே தவிரப் பகுத்தறிவு வாதிகளும், நாத்திகர்களும் நினைப்பது போல் ‘சமயம் என்பதைப் பொய்யாக்கத் தோன்றியதல்ல அறிவியல்’ என்ற பேருண்மையே விளங்கிடும்.

‘மரம்’, ‘உலோகம்’ என்கின்ற இரண்டின் தன்மைகளை அறிவியல் முறைப்படி விளக்குகிறது. ஓர் உலோகக் கம்பியும், மரக்குச்சியும் அடுப்பில் வைக்கப்பட்டால், சிறிது நேரத்தில் உலோகக் கம்பியின் மறுமுனை சூடாகி விடுகின்றது. ஆனால், மரக்குச்சி எவ்வளவு நேரம் எரிந்தாலும், அக்குச்சியின் மறுமுனை சூடாவதில்லை. இதனை உலோகத்தின் அணுக்கள் (good conductors of heat) வெப்பத்தைக் கடத்தும் தன்மையுடையவை என்றும், மரத்தின் அணுக்கள் (bad conductors of heat) வெப்பத்தைக் கடத்தாத தன்மை உடையவை என்றும் அறிவியல் விளக்குகின்றது. இதைப் போலத்தான் மனிதர்களில் (atoms of Divinity) இறைமையணுக்களைத் தங்களுக்குள் வரப் பெற்றுக் (good conductors of the atoms of Divinity) கடவுளை உணரக் கூடிய தன்மை படைத்தவர்கள் என்றும், இறைமையணுக்களைத் தங்களுக்குள் வரப் பெற முடியாமையால் (bad conductor of the atoms of Divinity) கடவுளை உணரக் கூடிய தன்மை இல்லாதவர்கள் என்றும் சமயச் சாத்திரங்கள் கூறுகின்றன.

சமயச் சாத்திரங்களை எதிர்ப்பதாக அல்லது மறுப்பதாக நினைக்கின்ற நாத்திகர்களும், பகுத்தறிவு வாதிகளும், கடவுளுக்கு ஆற்றலிருந்தால் எல்லா மனிதர்களையும் தன்னிடம் நம்பிக்கையும், பற்றும்

உள்ளவர்களாக ஆக்கிக் கொள்ளலாமே!? என்று வினவுகிறார்கள். இவர்கள், இயற்கையின் விதிகள் (**The Laws of Nature**) என்னவென்பதை உணராமல் பேசுகின்றார்கள். இறைவன் தனது படைப்பில் 'இரவும் பகலும்', 'அமுதும் நஞ்சும்', 'மலையும் மடுவும்', 'கடலும் குட்டையும்', 'புயலும் தென்றலும்', 'புஞ்சையும் நஞ்சையும்', 'பாலையும் சோலையும்', 'மேடும் பள்ளமும்' .... என்றிப்படி எதிரும் புதிரும், மாறுபாடும் வேறுபாடும் ... உள்ளவைகளைத்தான் படைத்துள்ளார்.

அதாவது, இயற்கை இப்படி இருவேறு முரண்பட்ட தன்மைகளைப் பெற்றிருப்பதால்தான், இந்த இயற்கையின் செல்லப் பிள்ளையாக, தலை மகனாக, உரிமைச் செல்வனாக, அரசனாகப் படைக்கப்பட்டுள்ள மனிதனின் வாழ்வில் அழுகையும் சிரிப்பும், துன்பமும் இன்பமும், பகையும் நட்பும், துறவும் உறவும், வன்மையும் மென்மையும், கொந்தளிப்பும் அமைதியும், குறையும் நிறையும், வெறியும் நெறியும், இகழும் புகழும், தோல்வியும் வெற்றியும், அவலமும் களிப்பும், ஆத்திரமும் பொறுமையும், .... கலந்து நிறைந்துள்ளன. இதைப் போலவே இறைவனிடம் பத்தி செலுத்தும் பத்தர்களும், இறைவனை வெறுத்து மறுத்துரைக்கும் நாத்திகர்களும் இருந்திடுகின்றார்கள். இதுதான், இறைவனின் படைப்புத் திறத்தின், தரத்தின் நுட்பம், இரகசியம் ... என்ற சித்தர்களின் கருத்தையே (குருபாரம்பரியம், குருவாசகம் என்ற நூல்களிலுள்ள கருத்துக்களின் சுருக்கம்) இங்கு கூற விரும்புகிறேன். சித்தர்களின் நூல்களில் இப்படிப்பட்ட விளக்கங்களே நிறைய இருக்கின்றன.

அறிவியலை நம்புகின்ற நாத்திகர்களுக்கும், பகுத்தறிவு வாதிகளுக்கும் இந்த விளக்கம் திருப்தியளிப்பதாக இல்லை. எனவே, அறிவியலின் அடிப்படையிலேயே விளக்கம் கொடுக்க முற்படுகின்றேன். 'காந்தம்' (Magnet) இரும்பு எனும் ஒரு தனிப்பட்ட உலோகத்தை மட்டுமே

தன்னிடம் கவர்ந்து இழுக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றதே தவிர, மற்ற உலோகங்களைக் கவர்ந்து இழுக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வில்லை. இதுதான், இயற்கையின் நியதி. அறிவியலும், காந்த சத்தியைப் பயன்படுத்தும் சாதனங்களில் இரும்பு எனும் உலோகத்தை தவிர வேறு உலோகங்களைப் பயன்படுத்துவதில்லை.

இதைப் போலத்தான் மனிதர்களில் முற்பிறவிப் பயன் எனும் ஊழ்வினை, பிறந்த நேரப் பயன் எனும் விதி, அங்கவியல், இரேகை ... முதலியவற்றால் பத்தியுலகுக்கு ஏற்றவன் என்ற தன்மைகளைப் பெற்றவனை மட்டும் *இரும்பு எனும் உலோகத்தைக் காந்தம் கவர்ந்து இழுப்பது போல* இறைவன் கவர்ந்து இழுக்கின்றான். அதாவது, இறைவன் எனும் காந்த சத்தியால் குறிப்பிட்ட மனிதத் தன்மைகளை உடையவர்கள் மட்டுமே கவர்ந்து ஈர்க்கப்பட்டு ஆட்கொள்ளப் படுகிறார்கள்; மற்றவர்கள் காந்தத்தால் கவரப்படாத உலோகங்கள் போலாகின்றார்கள். இப்படிச் சமயத் தத்துவம் அறிவியலால் மெய்யாக்கப் படுகின்றது.

இவ்வாறு சமயத்தையும் அறிவியலையும் ஒப்பிட்டுக் காட்டுவதால் இரண்டும் சமமானவை என்ற ஒரு மாபெருந் தவறான கருத்து உங்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாது. இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று மாறானவையல்ல! வேறானவையல்ல!! முரண்பாடானவையல்ல!!! என்பதை விளக்கிடத்தான் இதுவரை சில ஒப்புமைகளைக் குறிப்பிட்டேன்.

**சமயம் என்பது ஒரு பெரிய பரந்த விரிந்துபட்ட கடற்கரையின் மணற்பரப்பு போன்றது. அறிவியல் என்பது அக்கடற்கரை மணலை எண்ணப் போவதாக எண்ணி நிறைய மணலை அள்ளித் தன் மடியில் போட்டுக் கொண்டு அவற்றை எண்ணிப் பார்த்திட ஆரம்பிக்கும் சிறுவனைப் போன்றது**. இந்த ஓர் உவமானமே போதும், சமயத்தின் **அளத்தற்கு அரிய** பெரிய நிலையையும்,

அறிவியலின் **அளத்தற்கு உரிய** மிகச் சிறிய நிலையையும் விளக்கிடும். இம்மட்டில் இரண்டினையும் சமமாக நோக்குவதை நிறுத்திக் கொண்டு சமயத்தின் அளப்பரிய பெரிய நிலையை விளக்கிட முன் வருகிறேன். ஆங்காங்கே அறிவியலின் ஆரம்ப நிலையை, சிறுவனின் விளையாட்டுப் போக்கு வெறியினை சுட்டிக் காட்டிடவும் விழைகின்றேன்.

மனிதன் வாழப் பேருதவியாக உள்ள இயற்கையின் விண், வளி, தீ, நீர், மண் என்ற ஐம்பெரும் பகுப்புகளாகச் சமய வாதிகளும், அறிவியல் வாதிகளும் பகுக்கின்றுர்கள். இவையே 'பஞ்சபூதம்', 'ஐம்பூதம்' என்றழைக்கப் படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு உயிரியல், உடலியல், உலகியல், இயற்கையியல், இறையியல் எனும் ஐந்தினையும் கணிக்கும் சாத்திறமே '**பஞ்சாங்கம்**' என்றும், '**ஐந்திறம்**' என்றும் முறையே அழைக்கப் படுகின்றன.

தொல்காப்பியர் இந்த ஐந்திறம் எனும் சாத்திறத்திலே வல்லவராக இருந்ததால்தான் அவருடைய இலக்கண நூல், மொழிக்கு மட்டும் வரையறை கூறப்பட்ட ஓர் இலக்கண நூலாக இல்லாமல் தனி மனிதர் வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, இயற்கையியல், உயிரியல் ஆகிய ஐந்தினையும் முழுமையாக விளக்கிடும் ஓர் ஒப்புயர்வற்ற வாழ்க்கை நூலாக அமைந்திட்டது.

## விண்

சமயம் **"விண்வெளியில் கணக்கற்ற ஒளியுடைய மீன்கள் தெரிந்த போதும், ஒளியில்லாத கோள்களும் விண்ணில் இருக்கின்றன"** என்று பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியது. இப்பேருண்மையினை அறிவியல் தனது வான சாத்திறச் சாதனைகளால் ஆராய்ந்து ஒப்புக் கொண்டது.

விண்ணில் ஒளியுடைய விண்மீன்கள் (Stars), ஒளியில்லாத கோள்கள் (Planets) இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற பேருண்மையினை அறிவியல் ஒப்புக் கொண்ட போது, நாத்திகர்களும், பகுத்தறிவு வாதிகளும் *குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்து, எதிர்பாராமல் அங்கு பதுங்கியிருந்த எலியைப் பிடித்தது போன்று* சமயத்தின் கற்பனை வாதங்களில் இது ஓர் உண்மை என்கிறார்கள்.

அறிவியல், விண்வெளித் தொலைநோக்கிக் கருவிகளைப் (Astronomical Telescopes) புதிது புதிதாகக் கண்டுபிடித்துப் பல அரிய பெரிய உண்மைகளை உணர ஆரம்பித்து, பல மீட்டர் விட்டமுடைய பாலமார் டெலசுகோப் அமைக்கப்பட்டு விண்வெளியை ஆராய்ந்த போது "ஏழு கோள்கள்தான் உலகின் அருகில் உள்ளன, சமயவாதிகள் கூறுவதுபோல் ஒன்பது கோள்கள் விண்வெளியில் இல்லை" என்ற முடிவு அறிவிக்கப் பட்டது. அதாவது, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று ஏழு கோள்கள்தான் விண்ணில் உள்ளன. இராகு, கேது என்ற இரண்டு கோள்கள் இல்லை.

ஆனால், எல்லாக் கோயில்களிலும் நவக்கிரகங்கள், ஒன்பது கோள்கள் வழிபாட்டுக்குரிய சிலைகளாகவே இருக்கின்றன. அறிவியலின் அறிவிப்பு நாத்திகர்களுக்கும், பகுத்தறிவு வாதிகளுக்கும் பெரு விருந்தாயின. *"ஒன்பது கோள்கள் இருப்பதாகக் கற்பனை செய்ததோடு நிற்காமல், இந்த சமயவாதிகள் ஒன்பது கோள்களுக்கும் தனித்தனி வடிவத்தையும், வாழ்க்கை வரலாற்றையும், புராணப் பெருமைகளையும் உண்டாக்கி மக்களை மடையர்களாக, மூடர்களாக ஆக்கி விட்டார்களே! நல்ல வேளையாக அறிவியல் காப்பாற்றி விட்டது...."* என்று பலவாறாகப் பகுத்தறிவு வாதிகளும், நாத்திகர்களும் பேசித் தீர்த்தார்கள்.

அறிவியல் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு கலை. சமயம் என்பது வளர்ந்து முடிந்து நிறைவு பெற்று அழியாப் பெருநிலை

பெற்று விட்ட ஒரு அரிய, அளப்பரிய கலை. எனவே, அறிவியல் நாளுக்கு நாள் சமயத்தின் ஒவ்வோர் அங்கத்தை உணர்ந்து வரலாயிற்று. அதன் பயனாக **“விண்வெளியில் இருபத்தேழு விண்மீன்கள் அனுப்பும் ஒளியும், ஏழுகோள்களின் சுழற்சியால் வரும் ஒலியும் இரண்டு பெரிய காற்று மண்டலக் கோளங்களை உண்டாக்கியுள்ளன. அம்மண்டலங்களில் திடப்பொருள் ஏதுமில்லாவிடினும், அழுத்தமான காற்று மண்டலம் ஒலிஒளி அணுக்கள் சுழல இயங்குகின்றன. அவை, இந்த உலகுக்குத் தொடர்ந்து ஒலி-ஒளி கலந்த அணுக்களை அனுப்பிக் கொண்டேயிருக்கின்றன. இந்த அணுக்கள் உயிரினங்களைப் பாதிக்கின்றன...”** என்ற பேருண்மை கண்டு பிடிக்கப்பட்டது.

இப்பேருண்மையை சமயம் **“இராகு, கேது என்ற இரண்டு கோள்களே பிறப்பியலின்படி (சாதகம்) மனித வாழ்வில் அன்றாட நன்மை தீமைகளை நிர்ணயிக்கின்றன”** என்று கூறுகிறது. அத்துடன் **“இராகுவும், கேதுவும் தனித்த வடிவமின்றிப் பாம்பின் சீறல் ஒலி போலிருக்கும்”** என்றும் சமயம் கூறுகிறது. இக்கருத்துகள் அறிவியலை விடச் சமயம் பல கோடி மடங்கு உயர்ந்தது, சிறந்தது, உண்மையானது, ஆராய்ச்சி மிக்கது என்பதை விளக்குகின்றன.

விண்வெளியில் கணக்கற்ற விண்மீன்கள் இருந்த போதும் இருபத்தேழு விண்மீன்கள்தான் இந்நிலவுலகின் ஈர்ப்பு சத்திக்கு உட்பட்டு உள்ளன. அதுவும், அவற்றின் ஒளிகள் நிலவின் மேல் பட்டு, அங்கு ஒன்று சேர்ந்து, புதிய ஆற்றலுடைய ஒளிக்கற்றைகளாகிப் பிறகே (Reflected rays) பிரதிபலிக்கப்பட்ட ஒளிக்கற்றைகளாக இவ்வுலகை அடைகின்றன. இந்தப் பிரதிபலிக்கப்பட்ட ஒளிக்கற்றைகளே இவ்வுலகிலுள்ள பயிரினங்களும், உயிரினங்களும் வளர்ச்சியடைதற்குரிய ஆற்றலைத் தருகின்றன என்று அறிவியல் தனது ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

ஆனால், சமயம், பன்னெடுங் காலத்துக்கு முன்பே இம்மாபெரும் பேருண்மைகளைச் சுவையும் கற்பனையும் உடைய உவமைக் கதைகளாக்கி உள்ளது. அதாவது “இருபத்தேழு விண்மீன்களும் இருபத்தேழு கன்னிப் பெண்கள், நிலவு ஒரு இளவரசன்; இவன் இந்த இருபத்தேழு கன்னிப் பெண்களையும் மணந்து கொண்டு வாழ்பவன். இவனும், இவன் மனைவியரும் இம்மண்ணுலகுக்கு வரும் போதெல்லாம் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் பல பரிசுகள் வழங்கி இம்மண்ணுலகையே மகிழ்ச்சியின் வடிவமாக்குவர். இவர்களின் வருகை பருவமழை போன்று பயிர்களையும் உயிர்களையும் பாதுகாக்கின்றது....” (குருபாரம்பரியம், குருவாசகம் என்ற இரு நூல்களிலும் உள்ள கருத்துக்களின் சாரம்.)

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவரும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியுமான குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் ‘சித்தர் நெறி’ பற்றி எழுதும் போது **“சாத்திறங்கள் பொய்யா? மெய்யா? என்று அறிய வேண்டுமானால் கிரகணத்தைப் பார். இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழித்து வேண்டுமானாலும் சந்திர கிரகணம், ஆதவ கிரகணம் ஏற்படும் நாளும் நேரமும் சரியாக கணிக்கப்படக் கூடிய தரமும், திறமும் உடைய உண்மையான கலைகளே சமயச் சாத்திறங்களாக உருவாக்கப் பட்டுள்ளன”** என்று குறிக்கின்றார்.

இன்றைய அறிவியல் எவ்வளவோ வளர்ந்திருந்தாலும், வரப் போகிற சந்திர கிரகணத்தையோ! ஆதவ (சூரிய) கிரகணத்தையோ மிகத் துல்லியமாக வரையறுத்துக் கூறும் ஆற்றலை இன்னும் பெற்றிடவில்லை. இதை உணர்ந்தால் சமயம் அறிவியலை விடப் பல கோடி மடங்கு உயர்ந்தது என்ற பேருண்மை விளங்கிடும்.

அடுத்து **‘வளி’** எனப்படும் காற்று பற்றிச் சிந்திப்போம். அறிவியல் எவ்வளவு முன்னேறிய போதும் “எப்போது புயல் வரும்?”,

“எத்தனை மைல் வேகத்தில் வரும்?”, “எவ்வளவு நேரம் தொடர்ந்து வீசும்?” ,.. என்பனவற்றை ஓரளவு முன் கூட்டிக் கணிக்கத்தான் முடிகின்றதே தவிரப் புயலைத் தடுத்து நிறுத்தவோ, திசை திருப்பவோ முடியவில்லை. இதை உணர்ந்தால் சமயம் அறிவியலை விடப் பல கோடி மடங்கு உயர்ந்தது என்ற பேருண்மை விளங்கி விடும்.

## தீ

அடுத்து **‘தீ’**. சமயத்துறையில் தீ கடவுளாக மதிக்கப் படுகின்றது. தீ ஒளியுடையது. எதையும் எரித்துச் சாம்பலாக்கும் ஆற்றலுடையது. உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்தித் தருவது. மனித வாழ்வுக்கு மிகமிக இன்றியமையாதது என்ற காரணங்களால் தீ வணங்குதற்குரிய ஒன்றாக மதித்துப் போற்றப் படுகின்றது. தமிழில் ‘தீ’ என்ற ஓரெழுத்துச் சொல்லை அடிப்படையாகக் கொண்ட தீ > தே > தெய் > தெய்வம் என்று முழுமுதற் பரம்பொருளைக் குறிக்கும் சொல் பிறந்தது. இம்மட்டின்றி இத்தீயை வளர்த்தே வேள்வி, யாகம், ஓகம், தவம்... முதலிய அனைத்து வழிபாடுகளும் செய்யப் படுகின்றன.

இந்தத் தீயின் இன்றியமையாமையை, **“மலையத்தனை கடவுளுக்குக் கடுகத்தனை சுடமாவது ஏற்றிப் பூசை செய்தல் வேண்டும்.”; “எந்த உருவத்தையும் வழிபட்டிட விரும்பாதவன் இல்லத்தில் அகல்விளக்கு ஒன்றினைத் திருவிளக்காக ஏற்றி அச்சுடரில் கண்ணையும், கருத்தையும் ஒரு சேர இருத்தி முழுமனதுடன் வழிபாடு செய்தால் போதும்; எல்லாச் சத்திகளும், சித்திகளும், முத்திகளும் தானே வந்தெய்திடும்”** என்ற சித்தர் வாசகங்கள் விளக்கிடும்.

சித்தர் நெறியில் முழுமுதற் பரம்பொருளாகக் கருதப்படும் சிவபெருமான் ‘விண்’, ‘வளி’, ‘தீ’, ‘நீர்’, ‘மண்’ ஆகிய ஐந்து பொருள்களாக ஐந்து இடங்களில் இருப்பதாக கருதப்படுகிறது. இதுவே சிவனுக்கு ஐந்து தலைகள் என்ற கருத்து விளக்கக்

கற்பனை வடிவம் பிறக்கக் காரணம். இந்த அளவுக்கு செல்வாக்குப் பெற்றுவிட்ட தீயில் மணப் பொருள்கள், உணவுப் பொருள்கள் .... முதலியவை போடப்பட்டு எரிக்கப் பட்டால், அவை நேராக இறைவனைச் சென்றடையும் என்ற சமயக் கருத்தே வழிபாட்டு முறைகளின் உயிர்நாடி.

இங்குதான் பகுத்தறிவு வாதிகளும், நாத்திகர்களும் சமயத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசுதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்றார்கள். இவர்கள் நெருப்புக்கும் இறைவனுக்கும் இருக்கும் தொடர்பை எப்படியெப்படியோ கேலியும் கிண்டலும் செய்கிறார்கள். அறிவியல் வளர்ந்தது; அறிவியலின் அடிப்படையில் மண்ணெண்ணை அடுப்பு, எண்ணைக் காற்றடுப்பு.... என்ற புதிய நெருப்புச் சாதனங்கள் பெருகின. இவற்றை ஏன் பூசைக்கு பயன்படுத்தக் கூடாது என்றனர் பலர். காலப்போக்கில் இந்த அடுப்புக்களில் சமைக்கும் உணவை உட்கொள்வதால் பல புதிய நோய்கள் உண்டாகின்றன என்ற பேருண்மை கண்டுபிடிக்கப் பட்டு விட்டது.

அத்துடன் எரிகின்ற தீயில் எரிக்கப்படும் பொருள்கள் அணுக்களாக மாறிக் காற்றில் கலந்து, *ஒலி அலைகள் போல்* எங்கும் பரவுகின்றன என்ற பேருண்மையும் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது. எனவே. நெருப்பில் போடப்படும் பொருள்கள் எரிந்து அணுக்களாகி எங்கும் நிறைந்துள்ள இறைவனைச் சென்றடைகின்றன என்ற சமயப் பேருண்மை மிகத் தெளிவாகி விட்டது.

அறிவியல் எவ்வளவுதான் வளர்ந்தாலும் எரிந்து கொண்டிருக்கும் எரிமலைகளை ஒன்றும் செய்ய முடியாது, நெருப்பின் வடிவான இடியையும், மின்னலையும் அறிவியலால் முழுக்கக் கட்டுப்படுத்த முடியாது என்ற பேருண்மைகள் இயற்கை வடிவாக இருக்கும் சமயப் பேருண்மைகள் எவ்வளவு பெரியவை, அளப்பரிய ஆற்றலுடையவை என்பதை விளக்குகின்றன.

# நீர்

'**நீர்**' பற்றிச் சமயம் கூறுவதை நோக்குவோம். சமயத் தத்துவங்கள் இயற்கையை அப்படியே வணங்குவதில் பேரளவு ஆர்வம் காட்டுகின்றன. இயற்கையின் எழிலும், வளமும், வலிவும், வள்ளன்மையுமே இறைவனின் பெரிய நிலைகளை விளக்குதற்குரிய சான்றுகள் என்று எல்லாச் சமயங்களுமே கருதுகின்றன.

இச் சமயக் கருத்துக்குப் பெருமை சேர்ப்பது போன்றதே நீரின் நிலை. மழையாகப் பெய்யும் நீர், அருவியாகக் கொட்டும் நீர், ஆறாக ஓடும் நீர், ஏரிகளாகவும், குளம், குட்டைகளாகவும் தேங்கி நிற்கும் நீர், ஓயாது அலையெழுப்பி நடம்புரிந்து ஒலியெழுப்பி இன்னிசை பாடிடும் கடல் நீர் ... முதலிய எல்லா நீர்களுமே குளுமையையும், எழிலையும், வாழ்வின் தேவைகளை வழங்குதலையும் தங்களிடம் பெற்றுத் திகழ்கின்றன. எனவே, இவை இன்னருள் புரியும் இறைவனாகவே மதிக்கப்பட்டு வழிபடும் தகுதிகளைப் பெற்று விடுகின்றன.

சமய மறுப்பாளர்கள் இப்படி நீர் நிலைகளை வணங்குவதைக் கேலியும் கிண்டலும் செய்தனர். அறிவியல் வளர்ந்தது. நீரின் இயக்கமே மின் சத்தியாயிற்று, இம் மின்சத்திதான் அனைத்துத் தொழில் வளர்ச்சிக்கும், நாகரீக வாழ்வுக்கும் பெரிய நன்மையையும் விளக்குவதாயிற்று. அத்துடன், அறிவியல் எவ்வளவுதான் வளர்ந்தாலும், இயற்கையில் உள்ள உப்பு நீரை நல்ல நீராகவே மாற்ற முடியாது என்ற பேருண்மை சமயத்தின் தத்துவங்கள் முடிந்த முடிவானவை, பெரிய நுட்பமானவை என்பதை விளக்கிற்று. அதாவது, இறைவனால் படைக்கப்பட்ட இயற்கை மனித முயற்சியால் வளர்க்கப்பட்ட அறிவியலால் வெற்றி கொள்ள முடியாத ஒன்றாகும் என்பதேயாகும். எனவே, சமயம் அறிவியலை விட உயர்ந்தது, நுட்பமானது, திட்டவட்டமானது, உண்மை மிகுந்தது என்ற பேருண்மை மிகத் தெளிவாக விளங்குகிறது.

## மண்

இறுதியாக **'மண்'** பற்றிச் சமயம் கூறுவதை நோக்குவோம், இம்மண் பற்றிக் கூறும் போது சமயம், **"விண்ணும், காற்றும், நெருப்பும், நீரும் படிப்படியாக இணைந்து உருவான இறுதி நிலையே மண்"** என்று குறிக்கின்றது.

**"விண்வெளியில் காற்று மிகுந்து சுழல் காற்று உருவாகி அது நெருப்பாயிற்று. பற்றி எரிந்த நெருப்பு ஒரு மாபெரும் கோளமாயிற்று. அக்கோளம் ஒரு நூறு கோடியாண்டு சுடர்விட்டு எரிந்து அவிந்ததும் குளிர்மிகு பனிக்கட்டிக் கோளம் ஒன்று உருவாயிற்று. அப் பனிக்கட்டிக் கோளம் ஒரு நூறு கோடியாண்டு சுழன்று உருகி இறுதியில் நீர்க் கோளமாயிற்று. அந்நீர்க் கோளமும் ஒரு நூறு கோடியாண்டு சுழன்று சுழன்று நீர் வற்றிட ஆங்காங்கே கற்பாறைகள் வெளிப்பட்டு பெரிய மலைகளும், குன்றுகளும், மண்ணும் தோன்றின. அதன் பிறகு, உடலற்ற உயிர்களும், உடலுடைய பயிர்களும் தோன்றி வளரலாயின. இப்படி நீரிலிருந்து மண் தோன்றிட ஒரு நூறு கோடியாண்டு ஆயிற்று. அதாவது, நானூறு கோடியாண்டுகளாகிய பிறகு மண் தோன்றியது. அந்த மண்ணில் உடலற்ற உயிர்களும், உடலுடைய பயிர்களும் தோன்றி இன்றைய மனித இனம் தோன்றிட ஒரு நூறு கோடி ஆண்டுகளாயின. எனவே, இன்றைய உலகம் உருவாகிட ஐந்நூறு கோடி ஆண்டுகளாயின. எனவே இப்படி ஐந்நூறு கோடி ஆண்டுகளாக வளர்ந்த பயிரினங்களும் உயிரினங்களும் நீருக்குள்ளும் மண்ணுக்குள்ளும் நிறைந்திட்டன."** (குருபாரம்பரிய வாசகம்).

*[கட்டுரை முழுமையாகக் கிடைக்க வில்லை.]*

**//மூலம்: 1993-94இல் அச்சிடப்பட்ட இந்து ஆரணம் வெளியீடுகள் எண் 2 முதல் 7 வரையில் வெளியிடப் பட்ட தொடர் கட்டுரை.//**

# மணி மந்திரம் மருந்து (ஔடதம்)

1986 சனவரி மாத தர்மச் சுடரில் (பக் 44) ***மணி-மந்திரம்-ஔஷதம்*** என்ற தலைப்பில் நண்பர் திரு ராமனுதன் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு மறுப்பும் விளக்கமும்.

வழங்குவது:- **பதினெண்சித்தர் குவலய குருகுல பீடம்.**

மணி மந்திரம் மருந்து என்ற தலைப்பில்தான் பதினெண் சித்தர்களுடைய நூல்களில் சித்த மருத்துவம், சித்தர் மருத்துவம் பற்றிய விளக்கங்கள் எழுதப் பட்டுள்ளன. ஆனால், திரு ராமனுதன் அவர்கள் தாம் குறிப்பெடுத்த 'பதினெண்சித்தர்கள் வைத்திய சிரோரத்ன நமன காண்டம்' என்ற நூலில் (1)மணி, மந்திரம், ஔஷதம் என்றிருப்பதாகக் குறித்திருக்கிறார். மேலும், (2)சித்தர் மருத்துவமும், சித்த மருத்துவமும் ஒன்றே என்றும் கூறுகின்றார். இது மாபெரும் தவறு! தவறு!! தவறு!!! மிகவும் வருந்தத் தக்கது.

தம்முடைய காலத்திலேயே இப்படிப்பட்ட தவறான கருத்துக்கள், செய்திகள் மக்களைச் சென்றடையக் கூடாது என்பதற்காகவே திரு ராமனுதன் அவர்கள் தர்மச் சுடரில் வெளியிட்ட இரு தவறான கருத்துக்களுக்கு உண்மையான விளக்கங்களை வழங்குகிறார் இந்துமதத் தந்தை.

(2) **சித்த மருத்துவம், சித்தர் மருத்துவம் இரண்டும் ஒன்றல்ல. சித்த மருத்துவம் வேறு, சித்தர் மருத்துவம் வேறு.** நெருப்பின்றிச் செய்யப்படுபவை 'சித்தர் மருந்து'; நெருப்பைப் பயன்படுத்திச் செய்யப்படுபவை 'சித்த மருந்து'.

**சித்தர் மருத்துவம் என்பதில் பசுமையான மூலிகைகள், சில மண்கள், உப்புக்கள், உலோகங்கள், இறைச்சிகள், ... முதலியவை நிழலில், வெயிலில் அல்லது மண்ணுக்குள் புதைக்கப் பட்டு பக்குவப்படுத்தப் பட்டே மருந்துகள் தயாரிக்கப் படும். குறிப்பாக பல பொருட்களை அப்படியே இடித்துத் தூளாக்கிக் கலப்பதுதான் (Compound Mixers) வழக்கம்.**

இது பற்றி **'The Mental Disorders and Physical Disabilities'** என்று ஒரு சுருக்க விளக்க நூல் நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் எழுதி மத்திய அரசிடமும், மாநில அரசிடமும் தமிழகத்திலுள்ள புகழ் பெற்ற அச்சகங்களிலும் கொடுக்கப் பட்டு அச்சிடப் படாமல் அம்முயற்சி தோல்வியையே சந்தித்தது. தங்களிடம் அச்சகம் இருப்பதினால் எதை வேண்டுமானாலும் வெளியிடலாம் என்ற போக்கில் தவறான செய்திகளை மக்கள் மத்தியில் வழங்கித் தமிழினத்துக்கும், மொழிக்கும், நாகரீகத்துக்கும், பண்பாட்டுக்கும், பதினெண்சித்தர் கலை இலக்கிய மருத்துவத்துக்கும் விரோதமான, துரோகமான இம்மாதிரிச் செயல்களில் இனியும் ஈடுபட வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் திரு ராமநாதன் அவர்கள்;

*"மணி என்பது காலத்தைக் குறிக்கும், அது மருந்து சாப்பிடும் நாள், நஷத்திரம், நேரம், நல்ல வேளை இவற்றைக் கருத்தில் கொண்டு வகுக்கப் பட்டது; மந்திரம் என்பது இறைவனைக் குறித்துச் செய்யப்படும் பூஜை அல்லது பிரார்த்தனை, ஔஷதம் என்பது உட்கொள்ளும் அல்லது உபயோகிக்கும் மருந்து."*

என்றிப்படித் தவறான செய்திகளைக் குறிப்பதோடு தவறான விளக்கங்களையும் எழுதியுள்ளார். இது மிகவும் கண்டிக்கத் தக்கது.

(1)இது பற்றி பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் வழங்கிய விளக்கம்:

**<u>மணி</u>**: ஒளிக் கற்றைகள் (Light Rays). பலவகைப்பட்ட எண்ணெ விளக்குகளின் ஒளிகள்; உலோகங்கள், நவரத்தினங்கள் முதலியவைகளின் ஒளிகள், சூரிய ஒளி, நிலவின் ஒளி, .... முதலியவை.

சில குறிப்பிட்ட நோய்களுக்கு பல்வேறு வகையான ஒளிக் கற்றைகளைப் பயன்படுத்தி நலமளிக்கலாம்.

**<u>மந்திரம்</u>**: ஒலி அலைகள் (Sound Waves). பலவகைப்பட்ட இசைக் கருவிகளின் ஒலிகள்; உயிரினங்களின் ஒலிகள்; கடலலைகளின் ஒலிகள், .... முதலியவை.

பல்வேறு வகையான ஒலி அலைகளை உற்பத்தி செய்து (இசைக் கருவிகளின் உதவியுடன்) குறிப்பிட்ட நோய்களைக் குணமாக்கலாம்.

**<u>மருந்து</u>**: பொருள்கள் (Materials). கல், மணல், மண், பயிரினம், உயிரினம், உலோக இனம், உப்பு இனம், மூல இனம், ... முதலியவை.

பல்வேறு வகையான பொருட்களைப் பயன்படுத்தி பல வகைப்பட்ட நோய்களை நலமளிக்கலாம்.

இம்மூன்றையும் தனித்தனி மருத்துவத் துறைகளாக (Different branches of the Medical Science) வளர்த்தவர்களே பதினெண்சித்தர்கள். இந்த மருத்துவம்தான் சித்தர் மருத்துவம். இனிமேல் யாரும் இது பற்றியும், பதினெண்சித்தர்களைப் பற்றியும் எந்த விதமான தவறான செய்திகளையும் வெளியிட வேண்டாம்! வெளியிட வேண்டாம்!! வெளியிட வேண்டாம்!!! என்று குருதேவர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அறிவிப்பு வழங்குகிறார்.

**//மூலம்: 1986இல் வெளியாகிய குருதேவர் அறிக்கை எண் 25.//**

# குருவே உன் திருவடி சரணம்!

ஓம் குரு வாழ்க! ஓம் குருவே துணை! ஓம் குருவே எல்லாம்! ஓம் குருவே போற்றி! ஓம் குருவே சரணம்!

ஓம் குருவே உன் திருவடி சரணம்!
ஐயா உன் திருமுகம் வரணும், வரணும்!
குருவும் நீயே! திருவும் நீயே!
அருள்வாய் நீயே! அருளைத் தருவாய் நீயே!
கட்டத்தில் தவிக்கிறேன் என்னைக் காப்பாய்!
தீமை ஒழித்து நன்மை தருவாய்!
தீமை ஒழித்து நன்மை பெறவே வருவாய் நீயே!
அருள்வாய் நீயே! அருளைத் தருவாய் நீயே!
நான் என்று எனக்கே அறிய வைத்தாய்!
நன்மைகள் பலவும் கற்றுத் தந்தாய்!
தீமை ஒழித்து நன்மை பெறவே
வருவாய் நீயே! அருள்வாய் நீயே!
அருளைக் கொடையாய் தந்தார் ஐயா!
பெற்ற அருளை பேணிட வைப்பாய்!
சமுதாய மாற்றம் பெறவே வேண்டும்.
எத்தனை முயற்சிகள் எடுத்தார் ஐயா!
எத்தனை முயற்சிகள் எடுத்தாலுமே
குருவழி கருவழி உணர்ந்தோம் ஐயா!
வருவாய் நீயே! அருள்வாய் நீயே!

சுடலைத் தேவியின் அருளைப் பெறவே
சுடலை பூசை செய்தோம் ஐயா!
முன்னோரை வணங்கி முத்தி பெறவே
தமிழ் மந்திரங்கள் உச்சரித்தோம்!
குலத்தைக் காக்க குலதெய்வ வழிபாடு
பூசைகள் செய்து வந்தோம் ஐயா!
தமிழ் மந்திரங்கள் உச்சரித்தே
அருள் சத்தியினைப் பெற்றோம் ஐயா!
குருவழி அனைத்தும் கற்றோம் ஐயா!
குருவழி அனைத்தும் பெற்றோம் ஐயா!
குருவின்றி நாங்கள் இல்லை ஐயா!
குருவே உன் பாதம் சரணம்! சரணம்!

**<u>பாடல் ஆக்கம்:</u>**

சித்தரடியான் திரு கருணாகரன், சின்னக் காவணம், பொன்னேரி.

# குரு பாரம்பரிய வாசகம்

"எம்மால் உருவாக்கப் பட்டவர்களே! நீங்கள் இளைஞர்கள் என்றோ, முதியவர் என்றோ, சிறுவர் என்றோ, ஆண் என்றோ, பெண் என்றோ எண்ணாமல் நமது தாயகத்தின் நீடுதுயில் நீங்கிடப் பாடிடும் பல்வேறு வகைப் பறவைகளாக மாறி நாடெங்கும் பறந்து செல்லுங்கள். நமது பத்தி நெறி வரலாறு பற்றிப் பாடுங்கள்; நமது சத்தி நெறி பற்றி விளக்குங்கள்; நமது சித்தர் நெறியின் அருமை பெருமைகளை அறிவிப்புச் செய்யுங்கள். எல்லோரையும் நல்லவராக்குங்கள். முடிந்தவரை பொல்லாதவரை அழிக்கப் போதுமான வல்லவர்களை உருவாக்குங்கள்.

இனிப் போரின்றிச் சமாதானமில்லை; இனி அழிவின்றிச் செழிப்பில்லை; இனி பாடிவீடும், பாசறையும் அமைத்துப் படை நடத்திச் செயல்படாமல்; நம் பகைவர்கள் நம்மை விட்டுப் போக மாட்டார்கள். இனிமேலாவது விழிச்சியாலும், எழிச்சியாலும், கிளர்ச்சியாலும் பகைவர்களை அடியோடு அழிக்க முயற்சிகள் செய்தால்தான்; அவர்கள் விடிவதற்கு முன்னே சொல்லாமல் நம் தாயகத்தை விட்டு ஓடிட முடிவு எடுப்பார்கள்.

நமது வழிபாட்டு நிலையங்களிலே முரசு முழங்கட்டும்; பறை ஒலிக்கட்டும்; மணியோசைகள் எங்கும் எதிரொலிக்கட்டும்; இவற்றால், நமது மொழி இன மதப் பண்பாட்டுப் பகைவர்கள் இடியோசை கேட்ட நாகம் போல் அரண்டு மிரண்டு மாண்டு மடிவார்கள். அப்பொழுதாவது நமது தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் அருகு போல் முளைக்கட்டும்; ஆல் போல் தழைத்து நிலைக்கட்டும். ........"

**- அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் வாசகம்.**

**//மூலம்: குருதேவர் அறிக்கை: 50//**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் (கி.பி.785 - கி.பி.1040) சிற்பக் கலைக்கு மிகுந்த முதன்மை கொடுத்திட்டார். பல கோயில்கள், அரண்மனைகள், மாளிகைகள் கட்டுவதன் மூலம் கட்டிடக்கலைக்கும், சிற்பக்கலைக்கும் பேராதரவு நல்கினார்.



இவர் தன் காலத்து வாழ்ந்த ஒன்பது சோழ மன்னர்களின் சிலைகளையும் கருங்கல்லில் செதுக்கியுள்ளார். கருங்கல்லில் சிலைகள் செதுக்குவது, உலோகச் சிலைகளை வார்ப்பது, மண் பொம்மைகள் செய்வது பற்றி நூல்கள் எழுதியுள்ளார். இவர் காலத்தில் செய்யப்பட்ட பல ஐயனார் கோவில் குதிரைப் பொம்மைகளும், யானைப் பொம்மைகளும், முனிசுவரர் பொம்மைகளும், கிராம தேவதை சிலைகளும் இயற்கையின் வன்கரங்களை எதிர்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.



அம்மையப்பர்

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com